**முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்**

**O.S.No.81/2022**

PW1–கணேஷ்குமார் நாள்.30.01.2026

**3ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:**

நான் 2025ம் ஆண்டு முதல் வாதி வங்கி கிளையில் பணிபுரிகிறேன். 1ம் பிரதிவாதிக்கு கல்விகடன் கொடுக்கும்போது நான் வாதி வங்கியில் பணியில் இல்லை. கடன் வாங்கும்போது பிரதிவாதிகளுக்கும் அப்போதைய கிளைமேலளாருக்கும் இடையே என்ன பேச்சுவார்த்தை நடந்தது என்று எனக்கு தெரியாது. மொத்தகடன் தொகை இன்றைய தேதியில் வட்டியோடு எவ்வளவு என்று ஆவணங்களை பார்த்து தான் சொல்லமுடியும். 3ம் பிரதிவாதிக்கு வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்னர் அறிவிப்பு அனுப்பவில்லை. வழக்கு தாக்கல்செய்வதற்கு முன்னர் 3ம் பிரதிவாதியிடம் கடன்தொகை குறித்து எங்கள் வங்கியில் இருந்து கேட்டார்களா என்றால் கண்டிப்பாக கேட்டிருப்போம். அந்த விவரத்தை நிருபணவாக்குமூலத்தில் நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். 1, 2 பிரதிவாதிகளுக்கு சொத்துக்கள் உள்ளது என்றும், அவர்களை அணுகி பணத்தை கட்டசொல்லமால், அப்பாவியான 3ம் பிரதிவாதி மீது வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. 3ம் பிரதிவாதி ஜாமீன்தார் என்ற முறையில் தாவா கடன்தொகை செலுத்த கடமைப்பட்டவர் என்று நிருபணவாக்குமூலத்தில் கூறியுள்ளேனா என்றால் அவர் ஜாமீன் பத்திரம் எழுதிகொடுத்ததை சொல்லியுள்ளேன். வா.சா.ஆ.4 முதல் 7 ஆவணங்கள் எங்கள் அலுவலகத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றும், 3ம் பிரதிவாதிக்கும் அதிலுள்ள கையொப்பங்களுக்கும் எந்த சம்மந்தம் கிடையாது என்றால் சரியல்ல. 3ம் பிரதிவாதி தாவா கடனை செலுத்த கடமைப்பட்டவர் அல்ல என்றும், அவரை பொறுத்து வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:**

இல்லை

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.